மொழிபெயர்ப்பு

சுற்றறிக்கை இல:208

எனதுஇலக்கம்:11/3/கல/கணை/தொக
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
டியூக் வீதி கொழும்பு
1982.செப்டெம்பர் 21.

சகல ப.நோ.கூ.சங்கங்களினதும் தலைவர்கட்கு,

அன்புடையீர்,

**மொத்தக் களஞ்சியப் பகுதியில் விற்பனைப்பொருள் குறைவு,
மேலதிகம் முரண்பாடும் நிவாரணமும்**

1. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழான மொத்தக் களஞ்சியங்களில் விற்பனைப் பொருள் அலகுரீதியில் பொருட்கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்படுவதனால் பொருள் குறைவு கணக்கில் சில சந்தர்ப்பங்களில் ஒரேவகையான பொருள் குறைவும் மேலதிகமும் காணப்படுகின்றன. (பல்வேறு வகையான அரிசி, பல்வேறு வகையான கருவாடு, பல்வேறு வகையான சவர்க்காரம், பல்வேறு வகையான பற்பசை என்பன ஒரே வகையான பொருட்களுக்கு சில உதாரணங்கள் ஆகும்).

2. பொருள் குறைவு காரணமாக வேலை இடைநிறுத்தப்படும் களஞ்சியப் பொறுப்பாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது நடுத்தீர்ப்பு விசாரணை நடாத்தப்படும்போது பிரதிவாதித் தரப்பில் வேண்டுதலின் கீழ் அல்லது சாட்சியங்களின் அடிப்படையில் முற்கூறப்பட்ட பொருள் குறைவுக் கணக்கில் உள்ள பொருள் மேலதிகம் பற்றிய விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டி ஏற்படுகின்றது. அத்தகைய சந்தர்ப்பங்களில் பிரதிவாதிகள் விடுவிக்கப்படுவதனையும் மேன்முறையீட்டின் கீழ் விடுவிக்கப்படுவதனையும் காணக்கூடியதாக உள்ளது. இத்தகைய விசாரணைக்கு சங்கத்தின் நிதி வீண்விரயம் செய்யப்படுவது மட்டுமன்றி விடுதலை பெறும் பணியாளர்களுக்கு மீளவேலை வழங்க வேண்டி நேரிடுகையில் சங்கம் மேலும் பல பிரச்சனைகளையும் எதிர்நோக்குகின்றது.

3. அநேகமாக ஒரேவகைப்பொருள், பொருள் குறைவுக் கணக்கில் பிரதிபலிப்பதற்குக் காரணம் இருப்புப் புத்தகக் கணக்கு முறையாக பேணப்படாமையும், களஞ்சியப் பொறுப்பாளர் ஒரேவகைப் பொருட்களை தவறுதலாக விநியோகித்தலும் ஆகும். பதிவில் ஏற்படக்கூடிய தவறுகளை தவிர்ப்பதற்காக கீழ் குறிப்பிடப்படும் வகையில் விசேடமாக கணக்காளர்கள் செயல்படல் வேண்டும்.

   1. என்னால் இதற்கு முன் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய சங்க அலுவலகத்தில் மட்டும் அல்லது களஞ்சியப் பொறுப்பாளரினாலும் இருப்புப் புத்தகம் பேணப்படல் வேண்டும். இவை ஒவ்வொரு மாதமும் ஒப்பீடு செய்யப்படல் வேண்டும் என்பதற்காக களஞ்சியப் பொறுப்பாளர் தனது இருப்புப் புத்தகத்தின் மீதி உறுதி செய்த பிரதியை அலுவலகத்திற்கும் பெற்று அலுவலக புத்தக மீதியுடன் ஒப்பீடு செய்து வேறுபாடுகள் காணப்படின் அச்சந்தர்ப்பத்திலேயே அதனை திருத்திக்கொள்ளுதல் வேண்டும்.

   2. நாளாந்த பொருள் விநியோக பகுப்பில் (படிவம்-20) சிட்டைகளின் பெறுமதி உரிய நிரலில் கட்டாயமாகப் பதிந்து வழங்கிய பொருட்களின் மொத்தப்பெறுமதியை ஒப்பீடு செய்தல் வேண்டும்.

4. பதிவுப் பிழை காரணமாக அல்லது பொருள் மாறி விநியோகித்தல் காரணமாக ஏற்படக்கூடிய ஒரேவகைப் பொருள் குறைவு மேலதிகம் ஈடுசெய்வதற்கு இயக்குனர்சபை கீழ் குறிப்பிடப்படும் வகையில் செயல்படல் வேண்டும்.

   1. ஒரேவகைப் பொருட்களில் குறைவும் மேலதிகமும் காணப்படும்போது அதனை உறுதி செய்யும் பட்டியல் ஒன்றினை கணக்காளர் பொதுமுகாமையாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

2. சங்கத்தின் தலைவர், பொதுமுகாமையாளர், கணக்காளர் ஆகியோர் ஓர் சபையாக உரிய விடயம் தொடர்பில் செயல்பட்டு குறைவு மேலதிகம் ஈடுசெய்வதற்கு நியாயமான காரணம் காணப்படின் சபைப் பத்திரம் மூலம் ஈடுசெய்யும் வழிமுறையை இயக்குனர் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

3. குறைவு மேலதிகம் ஈடுசெய்யும் பொருள் ஒரேவகையானதாயினும் விலை மாற்றம் காரணமாக சங்கத்திற்கு ஏதேனும் இழப்பு ஏற்படின் அவ்விழப்பு களஞ்சியப் பொறுப்பாளரினால் சங்கத்திற்கு செலுத்தப்படல் வேண்டும். இதனால் ஏதேனும் இலாபம் ஏற்படின் அது களஞ்சியப் பொறுப்பாளருக்குரியதல்ல.

4. பொருளிருப்புப் புத்தகம் பதிபவர் அல்லது பொருள் வழங்குபவர் அல்லது வேறு பணியாளரின் குறைபாடு காரணமாக வேறுபாடு காணப்படின் அத்தகைய பணியாளர்களுக்கு எதிராக இயக்குனர்சபை பொருத்தமான ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

5. இவ்வாறான குறைவு மேலதிகம் நிதியாண்டொன்றினுள் இருப்புப் பரிசீலனையில் ஏற்படும் வேறுபாடு மட்டுமே ஈடுசெய்தல் வேண்டும் நிதியாண்டின் முடிவில் ஏற்படும் மேலதிகம் அடுத்துவரும் நிதியாண்டின் குறைவிற்கு ஈடுசெய்தலாகாது. இத்தகைய நிகழ்விற்கு களஞ்சியப் பொறுப்பாளர் எச்சந்தர்ப்பத்திலும் உரிமை கோர முடியாது.

5 கடந்த காலங்களிலும் இவ்வகையிலான குறைவு மேலதிகம் இருப்பின் இயக்குனர்சபை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

6. ஓர் சில பொருட்கள் (காய்வளவு, கரைதல்) தொடர்பில் திட்டவட்டமான இழப்பை தீர்மானிக்க முடியாதநிலை ஏற்படுதலாகும். பொருள் குறைவு தொடர்பான விசாரணையின்போது களஞ்சியப்பொறுப்பாளர் தாம் நிரபராதி என்பதனை உணர்த்துவதால் நடுத்தீர்ப்பு முடிவுறும்வரை காத்திராது கீழ் குறிப்பிடப்படும் வகையில் இயக்குனர்சபை செயலாற்றுதல் வேண்டும்.

1. தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் கழிவு தாரை அகற்றுவதற்கான ஏற்பாட்டினை உடனுக்குடன் மேற்கொள்ளுதல் வேண்டும்.

2. விரைவில் பழுதடையும், கறையும் பொருட்கள் தொடர்பில் நிவாரணம் வழங்குதல் முன் ஏற்பாடான முடிவாக கருதப்படாது அப்பொருள் கொள்வனவின்போது இருந்த நிலை, களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காலம் சீதோஷ்ண நிலை களஞ்சியத்தின் நிலை என்பவற்றை கவனத்திற்கொண்டு தீர்மானித்தல் வேண்டும்.

3. மொத்தக் களஞ்சியத்திலிருந்து இத்தகைய பொருட்கள் வழங்கி முடிவடையும் நிலையை அடையும்போது இத்தகைய ஆய்வினை மேற்கொண்டு குறைவு காணப்படின் உபகுழு ஒன்றின் மூலம் முன் கூறப்பட்ட விடயங்களையும் கவனத்திற்கொண்டு விற்பனையையும் கருத்திற்கொண்டு சபைப்பத்திரம் மூலம் கிடைக்கப்பெறும் சிபாரிசின் அப்படையில் இயக்குனர் சபையினால் குறிப்பிட்ட நிவாரண வீதம் தீர்மானிக்க முடியும் இத்தகைய உபகுழுவானது தலைவர், பொதுமுகாமையாளர், வர்த்தகமுகாமையாளர், கணக்காளர் ஆகியோரை உள்ளடக்குதல் வேண்டும். உபகுழுவானது தேவைக்கேற்ப களஞ்சியப் பொறுப்பாளரிடம் வினவுதலும் வேண்டும்.

4. முன் கூறப்பட்ட 6-3 பந்தியில் குறிப்பிடப்படும் வகையில் மேற்கொள்ளப்படும் இயக்குனர் சபைத் தீர்மானம் தொடர்பில் பிரிவு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். உதவி ஆணையாளரின் அங்கீகாரமன்றி இத்தகைய நிவாரணம் வழங்கப்படலாகாது என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

இப்படிக்கு தங்கள் நம்பிக்கையுள்ள,

பிரதி ஆணையாளர் (முகாமை)
கூ.அ.ஆ/கூ.ச.பதிவாளருக்குமாக.

பிரதி: 1. சகல கூ.அ.உ ஆணையாளர்களுக்கும் - தகவலுக்கும் நடவடிக்கைக்குமாக.
2. அதிபர், கூட்டுறவுக் கல்லூரி. - தகவலுக்காக.

-ரிவி.